திருவள்ளுவர் ஆண்டு 2043

மார்ச் - 2012

# செந்தமிழ்

தொகுதி : 56
பகுதி : 5

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




மார்ச் 8ஆம் நாள் கல்லூரியில் நடந்த மகளிர் தின விழாவில் காவல்துறை துணை ஆணையர் திருமதி. சி. கலாவதி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றிய போது கல்லூரிச் செயலாளர் நினைவுப் பரிசு வழங்குகிறார்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 56 திங்கள் இதழ்

பகுதி : 5 திருவள்ளுவர் ஆண்டு 2043

மார்ச் 2012




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**

தலைவர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# ✻ பொருளடக்கம் ✻


| | | |
|---|---|---|
| தமிழ் அருள் வள்ளல் ஸ்ரீபாண்டித் துரைத் தேவர் நூற்றாண்டு நினைவுத் திருவந்தாதி | மா. செயச்சந்திரன் | 4 |
| வெறியத்தில் 'கடவுள் சிந்தனை | முனைவர் யாழ் சு. சந்திரா | 9 |
| திருக்குறளின் அன்பு | முனைவர் கு. வேலன் | 16 |
| சுஜாதாவின் 'அடிமை' சிறுகதையில் கணினி அறிவியலின் தாக்கமும், மனிதவாழ்வின் நிலைப்பாடும் | நே.க. ஜெரும்லின் ஜடா | 19 |
| திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் (தொடர்) | சித்தாந்த நன்மணி முனைவர் கா. அரங்கசாமி | 25 |
| காந்தியைக் கண்டு கதிகலங்கிய சர்ச்சில்! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 31 |
| பள்ளியெழுச்சி வகை வளர்ச்சி | முனைவர் கி. இராசா | 32 |

# இதழ் மணம்

**அன்புடையீர்,**

**செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.**

மாசற்ற மாசி மாதச் செந்தமிழ் இதழைத் தங்கள் கைகளில் தவழவிடுவதில் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் பெருமையடைகிறது.

கவிஞர் மா. ஜெயசந்திரன் அவர்களின் தமிழ் அருள் வள்ளல் ஸ்ரீபாண்டித்துரைத்தேவர் அவர்களின் நூற்றாண்டு நினைவுத் திருவந்தாதியில் "வாழிய வள்ளல் வழிவள்ளல் வாழியவே ! செந்தமிழ் வாழிய வாழியவே !" என்று பாடியிருக்கின்ற அகவல் இன்பத் தமிழ்க் கவியை எடுத்து இயம்புகிறது.

வெறிப்பத்தில் கடவுள் சிந்தனையை யாழ். சந்திரா அவர்கள் தந்துள்ளார். கடவுள் மறுப்புச் சிந்தனைகூட ஒரோவழி ஒரு சில பழந்தமிழர்களிடத்துக் காணப்பட்டதை எடுத்து இயம்புகிறார்.

முதுபெரும் பேராசிரியர் முனைவர் கு. வேலன் அவர்கள் "அன்புற்றார் இன்புற்று வாழ்தல் இயல்பு" என்ற கருத்தைத் திருக்குறளில் அன்பு என்ற தலைப்பில் தந்து நம்மை மகிழ்விப்பதோடு சித்தாந்த நன்மணி முனைவர் கா. அரங்கசாமி அவர்களின் திருக்குறளின் "அறவியல் அடித்தளம் காணல்" என்ற கருத்துத் தொடரும் இம்மாத இதழில் அமைந்திருப்பது திருவள்ளுவரை நாம் முழுமையாக அறிந்து கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

நே.க. ஹேம்லின் ஜடா அவர்கள் "சுஜாதாவின் அடிமை சிறுகதையில் கணினி அறிவியலின் தாக்கமும், மனிதவாழ்வின் நிலைப்பாடும்" என்ற ஆய்வுக் கட்டுரையோடு முனைவர் கி. இராஜா அவர்களின் பள்ளியெழுச்சி வகை வளர்ச்சி என்ற கட்டுரையும் சிறப்பிடம் பெறுகிறது.

கவிவேந்தர் க. வேழவேந்தன் அவர்களின் மரபுக் கவிதை கவிப்பிரியர்களுக்கு இன்பம் தந்து தங்கள் கைகளில் தவழ்கிறது.

**முனைவர் க. சின்னப்பா**

***இனி நீங்களும் இதழும்....***

# தமிழ் அருள் வள்ளல் ஸ்ரீபாண்டித் துரைத் தேவர் நூற்றாண்டு நினைவுத் திருவந்தாதி

மா. செயச்சந்திரன்

அருந்தமிழ் அன்னை அரியணை அற்று
பெருந்துயர் உற்றபோழ்தில் சீறி; புயலாகி
அந்நிய ஆங்கில ஆட்சியை தானகற்றி
செந்தமிழ்த் தாய்க்கு அளித்தார் அரியணையே ! ( 1 )

அரியணை ஏறிய அன்னைத் தமிழை
தெரியார் உலகில் எவருமிலர் என்றாகத்
தன்பொருள் ஈந்து தனித்தமிழ் ஓங்கிடத்
தென்மதுரை யின்தமிழ்ச் சங்கம் அமைத்தாரே ! ( 2 )

அமைத்தசங்கம் வையத் தனைத்தும் ஓங்க
அமைத்தார் அறிஞர் அவையும் அதன்நடுவே !
செந்தமிழ்ச் சங்கம் சிறப்புற வேண்டித்தன்
சொந்தம் மறந்துதமிழ் சொந்தமென்று சொன்னாரே ! ( 3 )

சொன்னார் அவர்தம் மனமொழி வாக்காலே
என்றும் தமிழேதன் இன்னுயிர் என்றாரே
நெற்றியில் பூசிய வெண்ணீறும் நெஞ்சினில்
பற்றிய பைந்தமிழும் பாடும் அவர்புகழே! ( 4 )

அவர்புகழ் வையமெலாம் தான்ஒலிக்க நாமும்
அவர்வழி பற்றி அருந்தமிழ்ச் சேவை
அயராது ஆற்றி அணிசேர்த்தே என்றும்
உயர்ந்த அவருளம் உள்ளுவோம் நாமே ! ( 5 )

நாமே இனிச்செய்வோம் நற்றமிழ் நாடேதான்
போமே புவிமேல் நிலையில் மொழியாவும் !
தென்பொதிகை தோன்றிவளர் தீந்தமிழே என்றும்
தன்நிலை யில்திரியா வாழும் நிலைத்தே ! ( 6 )

நிலைத்துவாழும் செம்மொழிக்கு ஈடுஇல்ல என்றும்
நிலையின்றி வாழும் மொழியாவும் வீழும்
நிலைஓங்கி வாழும் தமிழ்மொழிக்கே சங்கம்
நிலைநாட் டியவள்ள லைப்போற்று வோம்மகிழ்ந்தே ! ( 7 )

மகிழ்ந்தே வணங்குவோம் மன்னாதி மன்னர்
முகிலென யார்க்கும் வழங்கும் அருள்வள்ளல்
பாண்டித் துரையார் நினைந்துபோற்றும் நூற்றாண்டை
வேண்டி விழைந்துபோற்று வோம்வரை வாக்காலே ! ( 8 )

வாக்கால் தமிழ்வாக்கால் வையம் தழைத்தோங்க
காக்கும் அருள்வள்ளல் பாண்டித் துரையாரின்
நூற்றாண்டை நெஞ்சில் நினைந்து நினைவுறுத்தி
போற்றிப் புகழ்வோம்நாம் பைந்தமிழால் இன்றே ! ( 9 )

இன்றே இனியவர் எங்கள் அருள்வள்ளல்
என்றும் இமயம்போல் மேலோங்கி நிற்களங்கள்
வாழ்வெலாம் ஈந்துஅவர் நல்வழி நிற்போமே !
வாழ்கஅவர் என்றுவா யாரநாம் வாழ்த்து வோமே ! ( 10 )

வாழ்த்துவோமே நாமவரை வாழ்த்துவோமே வையத்தில்
வாழ்வாங்கு வாழ்கவென வாழ்த்துவோமே ! கள்ளமிலா
நெஞ்சும் நிமிர்ந்தநன் நோக்கும் தனித்தமிழ்
கொஞ்சுமவர் சொற்றிறம் கண்டு வியப்போமே ! ( 11 )

வியப்போமே அருள்வள்ளல் பாண்டித் துரையார்
முயற்சியால் தோன்றிட்ட மூன்றடுத்த நான்காம்
தமிழ்ச்சங்கம் கண்டு அகமகிழ்ந்து அண்ணல்
தமிழ்ச்சேவை நூற்றாண்டு நினைந்து மகிழ்வோமே ! ( 12 )

மகிழ்வோம் அருள்வள்ளல் பாண்டித் துரையார்
நெகிழ்வுள்ளம் ஆழம் நினைந்து கசிந்துருகி
செய்தோம் நூற்றாண்டு நினைவுத் திருவந்தாதி
மெய்யாய் நினைந்திதை கற்போர் உயர்வாரே ! ( 13 )

உயர்ந்தோர் எனப்படுவார் ஒண்தமிழுக்கு உழைத்தோர்
முயன்றோர் எனப்படுவோர் முத்தமிழும் கற்றோரே
ஒண்தமிழும் உழைத்துநான் காம்தமிழ்ச் சங்கம்அமைத்து
மண்ணில் உயர்ந்தவள்ளல் பாண்டித் துரையாரே ! ( 14 )

பாண்டித் துரையார் பைந்தமிழுக்கு ஆற்றிய
மாண்புடை நற்செயல் நாம்நினைந்து இன்றவர்
நூற்றாண்டை கொண்டாடி நெஞ்சம் நிறைவோமே !
போற்றி அவர்தாள் பணிந்து புகழ்வோமே ! ( 15 )

புகழ்வோம் அருள்வள்ளல் பாண்டித் துரையாரை
திகழ்பரதக் கண்டமதில் தென்தமிழுக்கு நற்புகழ்
சேர்க்க நனிநான்காம் சங்கம் தோற்றிய
தீர்க்க தரிசியை எண்ணி நினைவோமே ! ( 16 )

நினைவோமே வள்ளல் நினைவுநூற் றாண்டை !
நினைந்தவர் உள்ளம் குளிர நற்றமிழ் கற்போமே !
மன்னர் வழிவந்த மாமன்னர் பைந்தமிழ்
அன்னைமுன் செய்தவத்தால் பெற்ற புதல்வரே ! ( 17 )

புதல்வரே தண்டமிழ்த்தாய் பெற்ற தவப்பயனே !
முதல்வராய் எங்கள் மனத்துள் இருப்பவரே !
வள்ளல் தமிழ்வள்ளல் பாண்டித் துரையாரே
உள்ளுவோம் உம்நினைவு நூற்றாண்டை இன்றே ! ( 18 )

இன்றே தமிழின் பெருமை இனிதுவப்போம்
என்றும் தமிழன் உயர வழிவகுப்போம் !
இன்தமிழ் ஓங்கப் பொருளை வாரிக் கொடுப்போம் !
என்றும் அருள்வருளால் சொன்னமொழி காப்போமே ! ( 19 )

காப்போமே நம்மொழி செம்மொழி என்றேநாம்
எப்போதும் எண்ணி உயிர்போல் இனிதோம்பிக்
காப்போமே வள்ளல் நமக்குரைத்த நல்வழி
காப்போடு நான்காம் தமிழ்ச்சங்கம் போற்றுவோமே ! ( 20 )

போற்றுவோமே பாண்டித் துரையாரைப் போற்றுவோமே
நூற்றாண்டு அவர்நினைவு நாளெண்ணிப் போற்றுவோமே
வற்றாத கங்கைபோல் வாரிவழங்கும் வள்ளலவர்
பொற்பாதத் தாள்பணிந்து நாட்டமிகப் போற்றுவோமே ! ( 21 )

போற்றுவோமே தாய்த்தமிழ் பெற்றெடுத்த வள்ளலைப்
போற்றுவோம் வையத்துள் வாழ்வாங்கு வாழவே
பாண்டித் துரையாரின் நூற்றாண்டு நாள் நினைந்து
யாண்டும் தமிழ்முழக்கம் வானெட்டச் செய்வோமே ! ( 22 )

செய்வோமே செந்தமிழ்த் தாய்பெற்ற செல்வர்
ஆய்ந்தறிந்த நற்றமிழ் காவலர் வையம் வாழ்
பாண்டித் துரையாரின் பைந்தமிழ்ச் சேவையை
வேண்டி அனைவரும் செய்வோம் தொடர்ந்தே ! ( 23 )

தொடர்ந்தே அருள்வள்ளல் விட்டபணி செய்வோம்
அடலேறு போல்கூடி நற்றமிழ் ஆய்வுசெய்வோம் !
இடர்தமிழுக் கென்றால் உயிர்கொடுத்துக் காப்போம் !
தொடர்தமிழ் சேவை அவர் நினைந்து செய்வோமே ! ( 24 )

செய்வோம் உலகில் செழுந்தமிழ்க் காப்பியம்
மெய்வள்ளல் பாண்டித் துரையார் நினைந்தே
விழுமிய நல்ஒழுக்கம் போற்றிய வள்ளல்
விழுமிய வாழ்வைப் பற்றுவோம் நாமினிதே ! ( 25 )

இனிதே அருள்வள்ளல் பாண்டித் துரையார்
நனிதமிழ் சேவையை நாட்டிற்கு உணர்த்த
இனிவரும் மாந்தரும் நற்றமிழ் கற்போம்
தனித்தமிழ் போற்றும் தமிழ்ச்சங்கம் வாழியவே ! ( 26 )

# அருள் வள்ளல்
# பாண்டித்துரைத் தேவர் நினைவு அந்தாதி

வாழிய வள்ளல் வழிவள்ளல் வாழியவே !
வாழிய செந்தமிழ் வாழிய வாழியவே !
காலமெல்லாம் வாழுமெங்கள் பைந்தமிழ் வாழியவே !
காலம்வென்று நான்காம் தமிழ்ச்சங்கம் வாழியவே ! ( 27 )

வாழிய வாழிய பாண்டித் துரைத்தேவர்
வாழிய வாழியவே பைந்தமிழ்போல் வாழியவே !
சங்கம் சிறக்கச் செயல்புரிந் தார்வாழியவே !
எங்கும் தமிழ்முழக்க மேசெய்வோம் வாழியவே ! ( 28 )

வாழிய பைந்தமிழ் வாழிய பைந்தமிழ்
வாழிய வாழியவே வாழிய வள்ளல்
வழங்கிய சங்கம் வளமுடன் வாழியவே !
பழந்தமிழ்ச் சங்கம்போல் வாழிய பல்லாண்டே ! ( 29 )

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
எல்லா வளமுமின்னே பெற்றுச்சங்கம் வாழியவே
எல்லா உலகும் இனிதமிழ் போற்றிடவே
நல்லார் அமைத்தநான்காம் சங்கமென்றும் வாழியவே ! ( 30 )

# வெறிப்பத்தில் 'கடவுள் சிந்தனை

முனைவர் யாழ் சு. சந்திரா
மதுரை – 1

பழந்தமிழரின் நம்பிக்கை வயப்பட்ட வழிபாட்டு முறைகளுள் வெறியாட்டுச் சடங்கும் ஒன்றாகும். குறிஞ்சிக் கடவுளாம் முருகனோடு தொடர்புடையதான இவ்வெறியாட்டு மலை நிலமாகிய குறிஞ்சிக்கு உரியதாக மட்டுமல்லாமல் பழந்தமிழர் வாழ்ந்த நிலப்பகுதி முழுமைக்குமான வழிபாட்டுச் சடங்காக இருந்தமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது.

இயற்கை வழிப்பட்ட கடவுளர்களையும் இனக்குழுச் சமுதாய வழிபாட்டுச் சடங்குகளையும் உடைய பழந்தமிழரிடத்தில் கடவுள் மறுப்புக் கொள்கையும் இருந்தமையைச் சங்க இலக்கியத் தரவுகள் சில சுட்டுகின்றன. இதனை ஐங்குறுநூறு வெறிப்பத்து வழி இவ்வரைவு காண முற்படுகிறது

## வெறியாடல்

'வெறி' என்பதற்கு மணம் என்று பொருள் கூறுவர். சான்றாக, 'வெறிமலர்' 'வெறிகமழ் பொழில்' முதலிய தொடர்களைச் சுட்டுகின்றனர். (துரைசாமிபிள்ளை ஒளவை சு. (உ.ஆ.) ஐங்குறுநூறு மூலமும் உரையும், ப. 531) மேலும் அழகும் ஒளியும் இளமை நலனும் திகழும் செடி கொடி பூக்களிடை சிறந்து நிற்கும் மிகுமணம், 'வெறி' என்ற சொல்லால் வழங்கப்படுகிறது என்றும் உரைப்பர். முருகனை வழிபடும் சடங்கு முறையில் மணம் மிக்கு இருப்பதனால் களத்தை 'வெறிக்களம்' எனவும் சடங்கினை, 'வெறி/வெறியயர்தல் என்றனர் போலும்.

நள்ளிரவில் மன்றத்திலோ, முற்றத்திலோ, ஆற்றின் நடுவிலோ ஏதாவது ஓரிடத்தைத் தூய்மை செய்வர். பூவாலும் புகையாலும் சந்தனத்தாலும் அவ்விடத்தை எழிலுற அமைப்பர். அவ்விடத்தில் இருந்து முருகனை வழிபடுவர். குறமகளுடன் இணைந்து சில போழ்து

ஆடிப்பாடுகின்றனர். இம்முறைமை அகத்திணையில் பெரும்பான்மையும் புறத்திணையில் சிறுபான்மையும் அமைகிறது.

## சேயோன் தொன்மமும் வெறியாடலும்

மதங்களின் அத்யாவசிய அம்சங்களில் ஒன்றாகச் சடங்குகளும் தொன்மங்கலும் சுட்டப்படுகின்றன. அவ்வகையில சேயோன் தொன்மத்தோடு இணைந்த சடங்கு முறையாக, வெறியாடல் பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகிறது. (சந்திரா சு. பழந்தமிழில் தொன்ம வகைமை வளர்ச்சி, (அச்சேறாத பி. எச்டி ஆய்வேடு, ப. 147) என்பர்.

'முருகென மொழியுமாயின்' (நற். 117) 'முருகயர்ந்து வந்த முதுவாய் வேல' (குறுந். 362) 'அன்னை அயரும் முருகு' (நற். 47) என்ற தொடர்கள் வெறியாட்டுச் சடங்கு பற்றிய பழந்தமிழர் எண்ணங்கள் சேயோன் தொன்மத்துடன் தொடர்புடையதாக உள்ளமையைத் தெளிவாக்குகின்றன எனலாம். இதனைத் தமிழ்நாட்டில் முருக வணக்கத்திற்குத் தோற்றமாக இருந்தது வேலன் வெறியாடல் இது ஓர் இனக்குழு வழிபாட்டு முறையாகும்' (வானமாமலை நா.) 'தமிழர் பண்பாடும் தத்துவமும்,ப.40) என அறிஞர் கூறுவது அரண் செய்கிறது. புறப்பொருள் தொடர்புடைய இச்சடங்கு முறை பெரும்பான்மையும் அகப்பொருள் காதல் தலைவிக்கு உரியதாகப் பழந்தமிழில் சுட்டப்படுகிறது. அதாவது வெறியாடல் என்பது புறத்திணையுள் வழிபாடாகவும் அகத்திணையுள் சடங்காகவும் உள்ளது எனலாம்.

## வெறிப்பத்து

ஐங்குறுநூற்றுக் குறிஞ்சித் திணைப் பாடல்கள் நூறு ஆகும். இதனைப் பாடியவர் கபிலர். இக்குறிஞ்சித் திணைப்பாடல்கள் 'வெறிப்பத்து' (241 - 250) என்ற தலைப்பில் தோழி கூற்றாக அமைகின்றன. வெறிவிலக்கியும் அறத்தொடு நிற்பதும் ஆகிய சூழல்களில் தோழி, செவிலி கேட்குமாறும் தமர் கேட்குமாறும் தலைவன் அறியுமாறும் தலைவியிடமும் தலைவனிடமும் கழங்கிடமும் பேசுவதாக வெறிப்பத்துப் பாடல்கள் அமைகின்றன. அதனைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகிறது.

| பாடல் எண் | கூற்று | யாரிடம் கூறுகிறார் | கேட்போர் | துறை |
|---|---|---|---|---|
| 241 | தோழி | தலைவி | செவிலி | அறத்தொடு நிலை |
| 242 | தோழி | தலைவி | - | அறத்தொடு நிலை |
| 243 | தோழி | - | செவிலி | வெறிவிலக்கல் |
| 244' | தோழி | தலைவி | செவிலி | வெறிவிலக்கல் |
| 245 | தோழி | - | - | வரைவுகடாதல் |
| 246 | தோழி | தலைவி | தலைவன் | வரைவுகடாதல் |
| 247 | தோழி | தலைவி | தமர் | வரைவுகடாதல் |
| 248 | தோழி | - | செவிலி | வெறிவிலக்கல் |
| 249 | தோழி | தலைவி | தாய் | அறத்தொடுநிற்றல் |
| 250 | தோழி | கழங்கு | செவிலி | அறத்தொடுநிற்றல் |

## ஐங்குறுநூறில் வெறியாட்டு மரபு

வெறியாட்டு மரபில் ஐங்குறுநூற்றில் பதினோரு பாடல்கள் இடம் பெறுகின்றன. அவை கள்வன்பத்தில் ஒருபாடல் (28) வெறிப்பத்தில் பத்துப்பாடல்கள் (241 – 250) ஆகும்.

தலைவிக்கு ஏற்படும் மெய்வேறுபாடு காரணமாக வெறியாட்டினைத் தமர் ஏற்பாடு செய்வர் (ஐங்.28, 241: 1) என்பது வெறியயரும் சூழல் ஆகும். 'நாமுறு துயர நோக்கி அன்னை வேலற்றந்தாளாயின்' என வெறியயரும் சூழல் சுட்டப்படுகிறது. வெறியயரும் களத்தில் மணல் பரப்புவதனை, 'பெய்ம்மணல் வரைப்பு (ஐங். 249 : 1) 'பெய்ம் மணன் முற்றங் கவின் பெற இயற்றி' (ஐங்: 248 : 1) என வரும் குறிப்புகள் காட்டுகின்றன.

வெறியயரும் களத்தில் கழங்கும் கட்டும் காண்பதும் முறையாக உள்ளது. இதனை 'கழங்கு மெய்ப்படுத்து' ( ஐங். 245., 2 ) 'கழங்கு மெய்ப்படுஉ' (ஐங் .246 :2 ) என வரும் குறிப்புகள் சுட்டுகின்றன.

'கன்னம் அணியும்' மரபினையும் ஐங்குறுநூறு, 'கழங்கு மெய்ப்படுத்துக் கன்னந்தூக்கி' (ஐங். 245 : 2) 'பொன்னகர் வரைப்பிற் கன்னந்தூக்கி' (ஐங். 247 : 2) எனச் சுட்டுகிறது. 'கன்னம் என்பது நோய் தணிதற்குப் பண்ணிக் கொடுக்கும் மந்திரத்தகடு உள்ளே வைத்துக் கட்டிய ,தாயத்து' எனவும், 'கழற்காய்களைத் தொடுத்து அவற்றிற்கு மஞ்சட்காப்பு கட்டி, இம்மையல் தீருங்காலும் இக்காப்பினை அணிந்திருக்க' எனவும் விளக்குவர் அறிஞர். (துரைசாமிபிள்ளை. ஔவை. சு. (உ. ஆ) மேலது, ப. 552)

வெறியாடல் மரபில் இடம் பெறும் மற்றொரு இன்றியமையாத கூறு 'பலியிடல்' என்பதாகும். தலைவியின் உடல் நலிவிற்குக் காரணம் சேயோனின் சினம் என்றெண்ணிப் பலி தருகின்றனர். பலி பற்றிய குறிப்பு வெறிப்பத்தில் இடம் பெறவில்லை எனினும், 'கடவுட்பேணி' ( ஐங் 243 : 1) என முருகனை வழிபடும் செய்தி சுட்டப்படுகிறது.

## வெறியாடல் பற்றித் தோழிகூற்று

வெறிப்பத்தின் பத்துப் பாடல்களும் தோழி கூற்றாகவே அமைகின்றன எனலாம். தலைவியின் மெய்வேறுபாட்டிற்குக் காரணம் அறியாது தாயர் வெறியயர ஏற்பாடு செய்வர். வெறியாடும் வேலனும், கட்டுவிச்சியும் இம்மாற்றம் வந்துற்றது எனக்கூறுவர். உண்மை அறியாத அவர் கூற்று தலைவிக்கும், தோழிக்கும் எள்ளற்கு உரியதாகிறது. வெறியாடலையும், வேலனையும் எள்ளல் சுவை தோன்றத் தோழி வினாவிற்கு உள்ளாக்குகிறாள். இதனை, 'சமுதாயச் சடங்குக்கும் கற்பொழுக்கத்துக்கும் ஒரு போராட்டத்தை வெறியாட்டில் காணலாம். முதுமை மரபைப் பின்பற்றும்; இளமை முதுமையை எள்ளும்' (மாணிக்கம். வ. சுப. தமிழ்க்காதல், ப. 73) என்ற கூற்று வலியுறுத்துகிறது எனலாம். அதாவது, தோழி கூற்றாக அமையும் இப் பாடல்கள் பழந்தமிழர் கடவுட்கொள்கையை வினாவிற்கு உட்படுத்துகின்றன எனலாம்.

மாறுபட்ட குறியின் பொய்ம்மையை மாற்றி, களவுக் காதலைக் கற்பின் அறநெறியாக மாற்ற வேண்டிய நெருக்கடியான நிலையில் தலைவியும் தோழியும் உள்ளனர். அவர்தம் இக்கட்டான நிலை, பழந்தமிழர் கடவுட்கொள்கையை

வினாவிற்கு உள்ளாக்குகிறது எனலாம். இதனை ஐங்குறுநூறு 'அறியாமையின் வெறியென மயங்கி' (ஐங். 242 : 1) என்ற தோழி கூற்றின் வழி சுட்டுகிறது.

## அறியா வேலன்

தலைவியது களவொழுக்கத்தை அறியாது வேலன் உரைக்கும் குறியான்து வேலனது அறிவுக்கு ஏற்படும் சவாலாக உள்ளது எனலாம். ஐங்குறுநூற்றில் அமையும் வெறிப்பத்தில், தோழியானவள், 'அறியாவேலன், வெறியெனக் கூறும்' (ஐங். 242:2 ) 'எவன் பயன் செய்யுமோ வேலற்கு அவ்வெறியே' (ஐங். 244:2) எனவும் உரைப்பாள். பிறிதொரு ஐங்குறுநூற்றுப் பாடலில், வேலனை, 'அறியாதோனே' (ஐங் : 249:4) எனச் சுட்டும் விளியும் வேலனது அறியாமையைக் (களவு பற்றிய அறியாமை) காட்டுகிறது. இதற்கு உரைகூறப் புகுந்த ஆசிரியர், வேலன் இவட்கு நோய்செய்த மலை நாடனை அறியாது அறிவான் போலக் கழங்குபடுத்து முருகு என மொழிந்தானாக அன்னை அதனை மெய்யெனக் கொண்டாள்; இஃதன்றோ அவள் அறியாமை இருந்தவாறு எனத் தாயுழை அறியாமையும் வேலனது பொய்ம்மையும் கூறி இகழ்ந்தவாறு என உரைப்பர். (துரைசாமிபிள்ளை. ஔவை. சு. மு.நூ. ப. 559)

## பொய்யாமரபின் வேலன்

தலைவிக்கு உற்ற காதல் அனுபவத்தை அறியாது, தாயர் வெறியயர ஏற்பாடு செய்வர். சமுதாயம் அறியாத தலைமக்களது களவொழுக்கத்தைக் கற்பாக மாற்றவேண்டிய கடப்பாடு உடையவளாகிய தோழி அறத்தொடு நிற்றல் நேர்கிறாள். தலைவியின் களவொழுக்கமும் அதனால் அவள் கவலும் நிலையும் அறியாத தாயும் பிறரும் தலைவியரது குன்றிய நலன் சீராக, வெறியாடல்ச் சடங்கினை நிகழ்த்த எண்ணுகின்றனர். ஆனால் தலைவியின் நிலைக்குக் காரணம் அறிந்த தோழி, அதனைக் குறிப்பாகப் பிறருக்குச் சுட்டுகிறாள்.

'நன்றால் அம்ம நின்ற இவள் நலனே' (ஐங்.248:4) 'முருகென மொழியும் வேலன் மற்றவன் ......சூர்மலை நாடனை அறியா தோனே'

(ஐங் : 249 : 2 – 4) எனத் தோழி குறிப்பிடும் தொடர்கள், வெறியாடும் வேலனது குறி கூறும் நம்பகத் தன்மையை வினாவிற்கு உள்ளாக்குகின்றன எனலாம்.

தோழி அங்கதச் சுவையுடன் வேலனைச் சுட்டி, அவன் கூறும் கழங்கும் கன்னமும் தலைவனுக்கு உரியதா? என விளக்கம் கேட்கிறார்.

*பொய்யா மரபின் ஊர்முது வேலன்*
*கழங்கு மெய்ப்படுத்துக் கன்னந்தூக்கி*
*முருகென மொழியு மாயின்*
*கெழுதகை கொல் இவள் அணங்கியேற்கே!* (ஐங் : 245)

என ஐங்குறுநூற்றுப் பாடலில், தோழி வினவுகிறாள். ஊரிலே மிகுந்த முதிர்ச்சி உடையவனும், பொய் சொல்லுதல் இல்லாத மரபில் வந்தவனும் ஆகிய தலைவன் என்ற தோழியின் அடைமொழி, முருகால் அணங்குற்றாள் தலைவி என்று உரைக்கும் குறியின் பொய்மையை எடுத்துரைக்கின்றன எனலாம். 'கடவுள் பேரைச் சொல்லிக் கொண்டு, பக்தியின் காரணம் காட்டிக் கொண்டு எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொள்ளுகிறோம் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள் (வீரமணி. கி. (தொ .ஆ), பெரியார் களஞ்சியம் – முதல் தொகுதி. ப. 123) என்பர் கடவுள் மறுப்பாளர்கள். அவ்வகையில் குறிஞ்சிக் கடவுளாம் சேயோனுக்கு உரிய வழிபாட்டுச் சடங்கு வழி பெறப்படும் 'அருள்வாக்கு பெண்களால் மறுக்கப்படுகிறது; எள்ளப்படுகிறது ; வினாவிற்குள்ளாகிறது எனலாம்.

## பொய்படு அறியாக் கழங்கு

வெறியாட்டுச் சடங்கில் முதற்செயல் கழங்குபார்த்தல் அக்கழங்கில் தலைவியது உடல் மாறுபாட்டிற்குக் காரணம், ஆண்டகை விறல்வேளாகிய முருகன் என்பான் வேலன்! வேலனைப் பொய்யா வாய்மையன் என்று கருதி, அவனைத் தருவித்து அவன் கழங்கு கொண்டு உரைப்பனவற்றை மதித்துப் பேணுவது மரபாதலின் ஈண்டு அவனது கழங்கு உரை பொய்யத்தமை கண்டு வியந்து கூறுவாளாகப் 'பொய்படுபு அறியாக் கழங்கே' என்றும் .... (துரைசாமிபிள்ளை. ஔவை. சு.மு.நூ., ப.560) பிறிதொரு பாடலில்,

'கழங்கினான் அறிகுவதென்றால் நன்றால் அம்ம நின்பு இவண் நலனே' (ஐங். 248:3-40 என்ற தொடருக்கு நாடன் செய்த நோயினை அவனது மலைக்கண் உறையும் அச்சந்தரும் தெய்வம் தந்ததாகப் பிறழ உணர்ந்து கொண்டு வேலன் உரைக்குறிப்புக்கள் எண்ணற்குரியன.

பிறிதோரிடத்தில், 'இவளுக்கு உற்ற வேறுபாட்டை வேலன் எடுக்கும் கழங்கும் வெறியும் தீர்க்கும் வன்மையும் தகுதியும் உடைய அல்ல என்பது தோன்றக் 'கழங்கினன் அறிகுவது என்றால்' என்றும், இவற்றால் எல்லாம் நீங்காமல் இவளது மெய்ப்பட்டு நிற்கும் வேறுபாடு தலைமகன்பால் கொண்ட தொடர்புவழித் தோன்றி,' (மேலது. ப. 557) என வரும் பகுதிகள், கழங்கின் பொய்ம்மையை - உண்மையல்லாத தன்மையைச் சுட்டுகின்றன எனலாம்.

## தொகுப்புரை

சேயோனை வழிபடும் சடங்குகளுள் ஒன்றான வெறியாடல் சடங்கினைச் செய்யும் வேலனை வினாவிற்கு உள்ளாக்கும் தோழியின் கூற்றுக்கள், கழங்கின் மெய்ம்மைத் தன்மையையும், வேலனது குறியையும் மட்டுமின்றி, முருகனது கடவுட்தன்மையயும் ஐயத்திற்கு உள்ளாக்குகின்றன எனலாம். 'கடவுளாயினும் ஆக, மடவை மன்ற வாழிய முருகே!' (நற் : 34 : 10-11) என்ற தொடரினைச் சுட்டலாம். களவொழுக்கம் காரணமாகத் தலைவிக்கு ஏற்படும் மெய்வேறுபாட்டை, முருகனால் வந்துற்றது எனும் வேலன் கூற்று, தோழியால் எள்ளி நகையாடப்படுகிறது.

வெறிப்பத்தில் தோழி உரைக்கும் கூற்றுக்கள் வழி பழந்தமிழரிடத்துக் கடவுள் மறுப்பு பற்றிய சிந்தனை இருந்தமை நிறுவப்படுகிறது எனலாம்.

# திருக்குறளின் அன்பு

**முனைவர் கு. வேலன்**
பொருளாதாரப் பேராசிரியர் மற்றும்
மனிதவள மேம்பாட்டுத்துறைத் தலைவர் (பணி நிறைவு)
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

பல்வேறு மாந்தர்களால் புகழின் உச்சாணியில் கொண்டு வைத்திருப்பது திருக்குறளின் மாண்பினையும் அதில் உள்ள ஒப்பற்ற கருத்துக்களையும் அறியலாம். ஆங்கிலத்தைத் தம் தாய்மொழியாகக் கொண்டிருந்த ஜி.யு.போப், ரெவரண்ட டிரு, ரெவரண்ட் லாசரஸ் போன்றவர்கள் அழகான ஆங்கில மொழிபெயர்ப்புக்களை அளித்துள்ளார்கள். மேலும் உலகின் பல்வேறு மொழிகளில் அந்தந்த நாட்டினரால் அவர்களது மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அந்நாட்டு மாந்தர்களுக்கு பயன்பாடு ஏற்படும்படிச் செய்துள்ளார்கள். தமிழகத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் ஆங்கில மொழி பெயர்ப்புக்களைச் செய்துள்ளனர். அவைகள் அனைத்தும் நல்ல நடைகளில் அமைந்துள்ளன. அவைகளில் மிக முக்கியமானது மதுரையைச் சார்ந்த பொறியாளர் கே.சி.அகமுடைநம்பியின் ஆங்கில மொழிபெயர்ப்பு உயர்ந்த ஒன்றாகும். அதைப்போல் பல ஆண்டுகளுக்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி எழுதிய குறள் பற்றிய கட்டுரைகளைத் தொகுத்து "வள்ளுவர் வாசகம்" என்ற புத்தகத்தில் 100 குறள்களுக்கு அழகான, அற்புதமான உரையை எழுதியுள்ளார். தமிழ் மொழியில் உள்ள உரைகளைக் கற்பது மிகவும் அவசியம். பிற மொழி தெரிந்தவர்களும் அந்தந்த மொழிகளில் படித்து, அறிந்து, பிறருக்கும்கூறி, குறட்கருத்துக்களின்படி நடக்கவும், பிறரை அவ்வழிப்படுத்துவதும் இன்றியமையாதது.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"* குறள் 391

**"Learn flawlessly what should be learnt act after having learnt, Live accordingly" (English Version by K.C. Agamudai Nambi)**

திருக்குறளின் காணப்படும் அதிகாரங்கள் அனைத்தும் குறள்களும் ஒன்றுக்கொண்டு சமமாகவும், ஒன்றை ஒன்று மிஞ்சுவதாகவும் உள்ளது.

கடவுள் வாழ்த்து அனைத்துச் சமயத்தினரது கடவுள்களைத் தொழுவதாகவும் அமைந்துள்ளது. அதைப்போல நன்றியறிதல் பகுதியில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும், அன்புடைமையிலும் கூறப்பட்டள்ள கருத்துக்கள் உலகத்தில் உள்ள மற்ற இலக்கியங்களில் காணப்படுவது என்பது மிகவும் அரிதாகவே இருக்கும்.

*"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு"*

இதற்குப் பல அறிஞர்கள் அளித்திருக்கும் உரைகளின் தன்மைகள் அழகும் நேர்த்தியையும் உடையது. அவற்றுள் ராஜாஜியின் உரை "வள்ளுவர் வாசகம்" என்னும் புத்தகத்தில் உள்ள உரையை பெரிதும் மகிழ்ந்து அளிக்க விரும்புகிறேன். இப்புத்தகம் மிகப் பழமையானது. கல்கி வெளியீடாகும். இதை மறு பதிப்புச் செய்வதாலும், இந்த 100 குறள்களைப் பாமரருக்கும் புரியும்படி உள்ளதைத் தமிழ் மறுபதிப்புச் செய்தால் தமிழுலகுக்குப் பயனுடையதாக இருக்கும். இந்த உரைகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புச் செய்தால் பிற நாட்டினருக்கும் பயன்படும் என்பது உறுதி. இப்புத்தகங்களுக்குப் பரிசு கிடைக்கின்ற வாய்ப்புகளும் மிகுதி. இப்புகழ் அனைத்தும் ராஜாஜியையே சாரும். மேல் காணப்படும் குறளுக்கு மூதறிஞர் ராஜாஜியின் உரையை அப்படியே தருவது நலம் பயக்குமென எண்ணுகிறேன்.

"மக்களுக்கு இருக்க வேண்டிய குணங்களுக்குள் அன்புக்கு வள்ளுவர் முதல் இடம் தருகிறார். அந்தக்குணம் இருந்தால் மனிதன் எத்தகையவன் ஆகிறான், அது இல்லாவிட்டால் எத்தகையவன் ஆகிறான் என்றும் இரண்டையும் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

அன்பு இல்லாதவர்களுடைய வாழ்க்கை முற்றிலும் சுயநல வழியில் தமக்கே செலவழிந்து பயனற்றுப் போகும். அன்பு என்னும் நிறைந்த உள்ளத்தைப் படைத்தவர்கள் உலகத்தின் செல்வம் ஆகி விடுகிறார்கள். அவர்களுடைய எலும்பும் பிறருடைய சொத்து ஆகிவிடுகிறது என்கிறார். அதாவது தமக்கென்று ஒன்றும் வைத்துக் கொள்வதில்லை" குறள் வாசகம் – 11, மூதறிஞர் ராஜாஜியின் நண்பரும் இந்திய நாட்டின் முதல் தலைமை அமைச்சருமான பண்டித ஜவஹர்லால் நேருவின் "விருப்பமும் எதிர்கால ஏற்பாடும்" என்பதைப் படித்தால் நன்கு புரியும்.

அதில் இந்திய நாட்டு மக்கள் தன்மீது செலுத்திய அன்பினைப் பற்றியும் கூறுகிறார். அதற்கு ஈடுஇணை எதுவும் ஆகாது. அதன் நன்றிக் கடனாகத் தான் எதைச் செய்தாலும், இணையாகாது என்று பல்வேறு கருத்துக்களைக் கூறிய பின்பு, கடைசியாக அவர் கூறுவது சொத்துக்களைப் பற்றியோ, அவரது ஆட்சியின் பெருமை பற்றியோ எதுவும் கூறவில்லை. தனது நன்றிக் கடனாக தான் இறந்த பின்பு தன்னுடைய எலும்பும் சதையும் சாம்பலாக்கப்பட்டு பின் அவைகளில் ஒரு பகுதியை மட்டும் கங்கை ஆற்றில் தூவுமாறும், (மத அடிப்படையில் அல்ல, கங்கையின் மேல் கொண்ட அன்பால்) பெரும் பகுதியை இந்திய விவசாயிகளும் உழவர்களும் பிறருக்காக கடினமாக உழைக்கும் உழவு நிலங்களில் தூவுமாறும் கூறியுள்ளார்.

**"The major portion of my ashes should however be disposed of other wise. I want these to be carried high up into the air in an aeroplane and scattered from that height over the fields where the peasants of India toil, so that they may mingle with the dust and soil of India and an in distingue shable part of India" Source : Will and testament of Jawaharlal Nehru.**

ஜவஹர்லால் நேருவின் இக்கருத்தும், அதனடிப்படையில்1964ஆம் ஆண்டு மே மாதம் அவர் இறந்த பிறகு அவர் கூறியபடி அவரது எலும்பும் சதையிலுமான சாம்பல் இந்திய நாட்டு விவசாய நிலங்களில் தூவப்பட்டது.

மேற்கூறப்பட் நேருவின் விருப்பமும் ஏற்பாடும் திருவள்ளுவரது குறளுக்குச் செயல்வடிவம் கொடுப்பதாகும். நேரு மட்டுமல்லாது மானிட குலம் முழுமையுமாக இந்தக் குரலுக்குச் செயல் வடிவம் கொடுத்தால் பல சமூக பொருளாதாரச் சிக்கல்கள் இரா.

இக்கருத்தை மகாகவி பாரதியார் கீழ்க்கண்ட வெண்பா பாடலில் கூறுகிறார்.

*"செய்கதவம் ! செய்கதவம்! நெஞ்சே! தவம் செய்தால்*
*எய்த விரும்பியதை யெய்தலாம் – வையகத்தில்*
*அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்*
*இன்புற்று வாழ்த லியல்பு"*

மகாகவி பாரதியார்

# சுஜாதாவின் ‘அடிமை’ சிறுகதையில் கணினி அறிவியலின் தாக்கமும், மனிதவாழ்வின் நிலைப்பாடும்

நே.க. ஹேம்லின் ஐடா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கினைத் தனது எழுத்துக்கு ஆதாரமாகக் கொண்டு கதைகள் எழுதிப் புகழ்பெற்றவர் எழுத்தாளர் சுஜாதா. அவரது கதைகளில் நவீன அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளில் ஒன்றான கணினியும், அதன் விளைவாக உருவாக்கப்படும் பொருள்களும் மனித வாழ்வியலில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும், அதனால் நிகழும் மாற்றங்களுக்கு அவை எவ்வாறு துணைபுரிவதாய் அமைகின்றன அல்லது சிக்கல்களை ஏற்படுத்துகின்றன என்னும் கருப்பொருளும் கதைகளின் போக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் எதிர்காலம் அறிவியலைத் தன் தேவைகளுக்கு எவ்வெவ்வாறு பயன்படுத்தும் என்பதும், அதனால் என்னென்ன சிக்கல்களை அது எதிர்கொள்ளும் என்பதனையும் தனது சிறுகதைகளில் விவரித்துள்ளார். அவ்வகையில் அவர் கணினி அறிவியல் தொழில்நுட்ப அடிப்படையில் எழுதிய ‘அடிமை’ என்னும் சிறுகதையில் வெளிப்படுத்தப்படும் கணினித் தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கும், அதனால் நிகழும் சிக்கல்களும் எடுத்துரைக்கப்படுகின்றன.

## ‘அடிமை’யின் கதை

அறிவியல் பயன்பாட்டுச் சாதனங்கள் இன்றி இன்றைய நிலையில் மனிதச் செயல்பாடுகள் இல்லை. அதன்காரணமாகவே அறிவியல் கண்டுபிடிப்புகளை அடிமை என்ற சொல்லால் குறித்துள்ளார் சுஜாதா.

இன்றைய நிலையில் கணினித் தொழில்நுட்பம் பெறாத துறைகள் இல்லை. கணினியின் உதவிகொண்டு மனித வளம் சார்ந்த துறைகளும், சாராத துறைகளும் பெரும் வளர்ச்சி பெற்று வருகின்றன. மனிதனால்

நிகழ்த்தமுடியாத பல்வேறு செயல்பாடுகளைக் கணினியின் துணைகொண்டு வேகமாகவும், விரைவாகவும், அதேசமயம் மிகத்துல்லியமாகவும் செய்துவருகின்றனர். அவ்வாறு கணினியின் துணையால் உருவாக்கப்பட்டு பெரும் சாதனைகள் புரிந்து வரும் ரோபோட் Robot எனப்படும் மனித இயந்திரங்கள் எதிர்காலத்தில் எந்த அளவுக்குப் பயன்பாட்டில் இருக்கும் என்பதனையும், மனித இயந்திரங்களான ரோபோட்டைப் பயன்படுத்துவதனால் எத்தகையச் சிக்கல்களைச் சந்திக்க நேரிடும் என்பதனையும் இக்கதையில் நிகழ்ச்சிகளின் போக்கில் கற்பனையாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

இன்னும் ஒரு 50, 60 ஆண்டுகளில் நகர்மயமாகிவிட்ட நடுத்தரவர்க்கக் குடும்பங்களிலும் கணினியால் வடிவமைக்கப்பட்ட ரோபோட் பயன்பாட்டில் இருக்கும் என்றும், அவற்றின் பயன்பாடு அதிகமாக இருந்தாலும், கூடவே சிக்கல்களும் இருக்கும் என்பதனையும் இக்கதையின்மூலம் எடுத்துரைத்துள்ளார்.

## கணினியின் அமைப்பு

சுஜாதாவின் சிறுகதைகளில் அறிவியல் செய்திகள் ஏனோதானோவென்று கற்பனையாகச் சொல்லப்படுவதில்லை. அறிவியல் என்பது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பதனை உணர்ந்தவர் அவர். அதன் காரணமாகவே அவரது கதைகள் பெரும்பாலும் அறிவியல் தொழில்நுட்பச் செய்திகளையும் வெளிப்படுத்தும் போக்கில் அமைந்திருக்கும். மேலும் அவை அவரது அறிவியல் அறிவைப் புலப்படுத்துவதாகவும் அமைந்திருக்கக் காணலாம். இக்கதையில் ரோபோட் எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கும் என்பதனையும், அது எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பதனையும் விவரித்துள்ளார்.

"இது ஒரு ஆளில்லை, மெஷினில்லை, ஓர் அமைப்பு! கம்ப்யூட்டர் இருபத்தோராம் நூற்றாண்டின் முன்னேற்றத்தின் உன்னதம்! சேகர் (ரோபோ) உங்கள் வீடு முழுவதும் விரவியிருப்பான். சமையல் அறையில், படுக்கை அறையில், படிப்பு அறையில், எங்கும் எங்கும் பதிந்த அதன் சென்ஸர்கள் உங்கள் ஆணைகளைப் பெற்றுக் கொண்டு அதன் மத்தியக் கம்ப்யூட்டருக்கு அனுப்பும். கம்ப்யூட்டர் உடனே அந்த ஆணையைச் செயல்படுத்தச் செய்திகள் கொடுக்கும். உதாரணமாக, நீங்கள் சேகர் எனக்கு ஒரு கப் ஸோமா வேண்டும்

என்று எந்த அறையிலிருந்து சொன்னாலும் போதும். உடனே கம்ப்யூட்டர் சமையல் அறையில் மைக்ரோ அவனுக்குச் செய்தி சொல்லித் தேவையான கார்போ சேர்த்து இனிப்புச் சேர்த்து ஸோமோ தயாராகிவிடும். சேகரின் கம்ப்யூட்டரின் ஞாபக அடுக்கில் நம் தினப்படி வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை விஷயங்களும் பதிந்திருக்கின்றன" (ப. 259)

என்று கம்ப்யூட்டரின் பயன்பாடும் அது செயல்படுத்தப்படும் விதம் குறித்து விளக்குகின்றார்.

## எதிர்காலக் கணினியின் அமைப்பு

இக்கதை நிகழும் காலத்தில் (2079) ரோபோட் குடும்பத்தில் ஒரு உறுப்பினராகவே திகழும் என்பதனையும் குறிப்பிடுகின்றார். அதனால் அதற்கு ஒரு பெயரும் இட்டுள்ளார். சேகர் என்பது அந்த இயந்திரத்திற்குப் பெயரிட்டிருப்பது அவரது கற்பனையாற்றலை எடுத்துரைக்கின்றது. அது மனிதருக்குத் தேவையான செயல்பாடுகளை வாய்மொழி உத்தரவின் மூலமே செயல்படுத்தும் திறன்வாய்ந்ததாக இருக்கும் என்பதனையும் எடுத்துரைக்கின்றார்.

"சேகரின் எலக்ட்ரானிக்ஸ் முழுவதையும் உங்கள் வீட்டுச் சுவர்களின் அந்தரங்கத்தில் பதித்துவிடுவோம். ஒவ்வோர் அறையிலும் பதிந்த ஒலிபெருக்கிகள், சென்ஸர்கள். அவைதான் சேகரின் உதடுகள், கண்கள், காதுகள், அவன் மூளை ஒரு கம்ப்யூட்டர்" (ப.262) என்று கணினியின் அமைப்புமுறையினையும் அவற்றின் செயல்பாடுகளையும் குறித்து விளக்கம் தருகின்றார்.

"உங்கள் ஒப்பந்தத்தின்படி ஆணைகள் பிறப்பிக்க மூன்று பெயர்களை நியமித்து அஸ்ட்ரா கம்பெனிக்குச் சொல்லி இருக்கிறீர்கள். அதன் படி என் ஞாபக இதயத்தில் முடியாதவாறு பதிய வைக்கப்பட்டுவிட்டது. ஆத்மா, நித்யா, பாபு மூவரின் கேள்விகளுக்கும் ஆணைகளுக்கும் கட்டுப்படுவது என் அழிக்க முடியாத கடமை" (ப. 264) என்னும் பகுதியில் ரோபோட் மனிதப் பேச்சுக்குக் கட்டுப்பட்டுச் செயல்புரியும் திறன் வாய்ந்ததாகத் திகழும் என்னும் தொழில்நுட்பத்தைப் புலப்படுத்துகின்றார்.

## கணினியால் எழும் சிக்கல்

கணினியால் வடிவமைக்கப்பட்ட ரோபோ எனப்படும் மனித இயந்திரம், மனிதன் தரும் கட்டளைகளுக்கு உட்பட்டது என்றாலும், மனிதனால் செய்ய இயலாத காரியங்களையும் செய்ய வல்லது. மனிதனது தேவைகளைத் துல்லியமாகவும், தெளிவாகவும் செயல்படுத்தும் திறன்வாய்ந்ததாக இருப்பதனால் அது மனிதனுக்கு அவ்வப்போது தேவைப்படுவதாகவும், பல நேரங்களில் தொல்லை தருவதாகவும் அமைந்து விடுகின்றது என்பதனை இக்கதையின் மூலம் காட்டுகின்றார்.

ஆத்மாவின் மகன் பாபு தனக்கு ஒரு யானை வேண்டும் என்று கேட்கிறான்? அதற்கு அந்தக் கணினி மனிதன், 'யானை இந்த நூற்றாண்டில் கிடையாது!' என்று சொல்கிறான். இதனால் சமாதானமடையாத தன் குழந்தையை அமைதிப்படுத்த இயலாமல் தவிக்கின்றான் ஆத்மா.

"நிஜ யானை- இந்த நூற்றாண்டில் கிடையாது. நீங்கள் பார்த்தது பொம்மை என்றான் சேகர் (ரோபோவுக்கு இடப்பட்ட பெயர்)

யானை இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே மனிதர்களால் அழிக்கப்பட்டு அந்த ஜாதியே...

போதும் நிறுத்து சேகர்! குழந்தையிடம் கூடப் பொய் சொல்ல மாட்டாய் நீ! பாபு நீ உள்ளே போடா கண்ணு. நான் நாளைக்கு யானை வாங்கித் தருகிறேன்.

பொய்சொல்லத் தெரியாது சேகருக்கு." (ப. 261)

என்னும் பகுதியில் நம்மால் உருவாக்கப்பட்ட கணினி நாம் இடும் ஆணைகளைத் தான் செயல்படுத்தும் என்பதனையும் அதனால் பொய் சொல்ல இயலாது அல்லது நேரத்திற்குத் தக்கவாறு பேச இயலாது என்பதனை எடுத்துரைக்கின்றார். இதனால் கணினியைப் பயன்படுத்துவதில் எழும் சிக்கலைக் காட்டுகின்றார்.

இரண்டாவது, கணினி வீட்டின் எல்லாப் பகுதிகளிலும் செயல்படுவதால் அவை கணவன் – மனைவிக்கிடையே எழும் அந்தரங்க

விஷயங்களிலும் தலையிடுகிறது. இதன் காரணமாக ஆத்மா, இந்த கணினியைப் பயன்படுத்துவதால் எழும் சிக்கலுக்கு உள்ளாகி மன அமைதி இழக்கிறான். இனி இந்தக் கணினியைப் பயன்படுத்தக் கூடாது என்று தன் மனைவிக்குக் கட்டளையிடுகின்றான். அவளோ அதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றாள். அறிவியலுக்கு அடிமைப்பட்டுப்போன வர்க்கம் அதிலிருந்து பின்வாங்க மறுக்கும் உண்மையினை இப்பகுதியில் எடுத்துரைக்கின்றார்.

"ஆத்மா, ஏன் இப்படி மரமண்டையாய் இருக்கிறாய்? சேகர் மனிதனில்லை. ஒரு குரல். இயந்திரம். ஒரு சாதனம் ஒரு சௌகரியம்? அவ்வளவுதான்.

சேகர் எனக்கு வேண்டாம்?

எனக்கு சேகர் வேண்டும்...

ஆத்மா தீர்மானமாகச் சொன்னான். சரி இரண்டில் ஒன்று தீர்த்துவிடலாம். உனக்கு நான் வேண்டுமா? சேகர் வேண்டுமா?.... சொல்....

இல்லை.....இப்பொழுதே பேசி முடிவுகட்ட வேண்டும்" (ப. 265)

என்னும் பகுதியில் கணினியைப் பயன்படுத்துவதால் எழும் சிக்கலைப் படம்பிடித்துக்காட்டுகின்றார். கணினிக்குப் பழக்கப்பட்டுவிட்ட மனைவி தன் கணவனைவிட கணினியே தற்போதைய தேவை என்று கருதும் நிலை உள்ளதனை இப்பகுதியில் எடுத்துரைக்கின்றார்.

இக்கதையின் இறுதியில் கதையின் தலைவனான ஆத்மா மன அழுத்தத்திற்கு உட்பட்டு, அதன் காரணமாகத் தான் பயன்படுத்தி வந்த கணினி ரோபோட்டை அழிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகக் காட்டுகின்றார்.

"இந்த நூற்றாண்டில் மகத்தான தப்பு. மற்றொரு தப்பு இந்தக் கம்ப்யூட்டர்கள்" (ப. 265) என்று கதையின் நாயகன் கருதுவது சிந்திக்கத்தக்கது.

## முடிவுரை

இந்தக்கதையின் மூலமாக எழுத்தாளர் சுஜாதா, அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி எதிர்காலத்தில் எத்தகைய மாற்றங்களை உருவாக்கும் என்பதனைக் காட்டுகின்றார். அதனால் மக்கள் எத்தகைய சிக்கலுக்கு ஆளாவார்கள் என்பதனையும் அறிவியல் நோக்கோடு சித்திரித்துள்ள திறன் போற்றத்தக்கதாய் அமைந்துள்ளது. 1984இல் வெளிவந்த இக்கதையை இன்றைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அறிவியல் தகவல் தொழில்நுட்பத்துக்குள் மக்கள் எந்த அளவுக்குத் தங்களைத் திணித்துக் கொண்டுள்ளார்கள் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். அறிவியல் தொழில்நுட்பம் பல நன்மைகளைச் செய்யும் அதே வேளையில், பல்வேறு விதங்களில் நமக்குத் தொல்லையையும் கொடுக்கும் என்னும் கருத்தினையும் இக்கதையின் மூலமாக எடுத்துரைத்து நமக்கு ஒரு படிப்பினையைத் தந்துள்ளார்.

---

# வாசகர் வாசகம் 1

செந்தமிழ் வாழ்க !

செந்தமிழாம் திங்களிதழ் சொல்லும் செய்தி
செங்கரும்பாய் இனிக்கின்ற தேனாம்; பண்டைத்
தமிழர் நடப்புரைத்தே இலக்கணங்கள்
நயம் சொல்லும் இலக்கியத்தின் எழிலைக் கூறும்
சொந்தமொரு மதுரையிலே சங்கம் கண்ட
சுடர்பாண்டித் துரைத்தேவர் புகழியம்பும்
எந்தாயாம் தமிழன்னைச் சிகரம் ஏற்றி
இனிக்கின்ற தொண்டாற்றும் இதழே வாழ்க !

அன்புடன்,
**பாவலர் அறிவரசன்**
திருலோக்கி

# திருக்குறளின் தோற்றக்களம் அல்லது உரைகாணும் நெறிமுறைகள் (தொடர்)

## 3. திருக்குறளின் அறவியல் அடித்தளம் காணல்

சித்தாந்த நன்மணி
முனைவர் கா. அரங்கசாமி
கோபி

### முன்னுரை

திருக்குறள் காலம் கடந்தது; கருத்துவளம் மிக்கது, உலகளாவிய சிந்தனை வளம் கொண்டது; சமயச்சார்பற்றது; அறவியல் பொதுமை கூறுவது; உலகமெய்யியலின் அரிச்சுவடி என்றெல்லாம் கூறிடினும் நம்மால் குறளின் ஆற்றலை முற்றமுடியக் கூற இயலாது என்னும் குறை நிலைக்கும். அதனால்தான் இருமுறை நோபல் பரிசு பெற்ற செர்மன் நாட்டு மருத்துவர், மெய்யியல் அறிஞர் ஆல்பர்ட்சுவைட்சர் "திருக்குறளுக்கு முன்னும் பின்னும் அது போன்ற நூல் தோன்றவில்லை" என்று கூறியது எவ்வளவு உண்மை என்பதை இழிந்த தமிழ் அறிஞர்கள் உணரவேண்டும். இன்றும் திருக்குறளுக்குச் சமயச்சார்பு கூறும் சழக்கர்கள் இருப்பது விந்தை. திருக்குறளை அறியும் திறன் மிகமிக அதன் நுட்பம் திட்பம் விரியும் எனவே நாம் காண்பதே முற்ற முடிந்தது என்று எண்ணுதல் வேண்டா? ஆய்வுக்கு எல்லையுண்டா? திருக்குறளை அறவியல் பார்வை, சமூகநீதிப்பார்வை, வரலாற்றுப்பார்வை, உலகியல்பார்வை, தமிழியல்பார்வை, மெய்யியல்பார்வை, சமயங்கடந்தபார்வை என்பன போன்ற வழிகளில் காணுதல் கூடும் என்பதை எவரும் மறக்கக் கூடாது. நாம் காண்பது அறிவர் நெறி என்னும் சித்தர்வழிப்பார்வையாம்.

எனவே அறவியலும் சமூகநீதியும் புதிய வடிவம் பெற்ற அறிவர் நெறி நின்று திருக்குறளின் அறவியல் அடித்தளம் காணுவது இக்கட்டுரையின் நோக்கம். நம்முடைய இயலாமையைக் குறளின் இயலாமையாகக் காட்டக் கூடாது புல்லறிஞர் பலர் இச்செயலைச் செய்துள்ளனர். அதனை இனங்காணும் அறிவு வேண்டும். உரையாசிரியர்கள் பலரும் காலக்

கோட்பட்டவர்கள். சமயக் சழக்கில் வீழ்ந்தவர்கள் என்பதை நினைவில் நிறுத்துக.

திருவள்ளுவரின் நோக்கம் உலகினை அறவியல் ஆளவேண்டும். மனிதன் மீமாந்தனாகித் தெய்வ நிலைபெறல்வேண்டும். மண்ணுலகம் கனவுக் கற்பனையாக இருந்துவரும் விண்ணுலக இன்பம் நிறைக்க வேண்டும். மாந்தவளம் அனைவருக்கும் பொது. அதனை அடைய அறவியல் அடித்தளம் அமைத்தவர், குறளாசான். எனவே இங்கு அறம், அறவியல்,, அடித்தளம் என்ற சொற்களுக்கு முதலில் காலக் கோட்படாத விளக்கம் காணல் வேண்டும். பின்னர். திருக்குறளின் அறவியல் அடித்தளம் படைக்கவேண்டும்.

## அறம் சொற்பொருள் விளக்கம்

"அறு" என்னும் வினைச்சொல் அடியாய்ப்பிறந்ததே அறம் "அறு" என்னும் சொல்லிற்கு "அறுத்துச்செல்" "வழியை உண்டாக்கு" "உருவாக்கு" "துண்டித்திடு" "வேறுபடுத்துக," "ஆற்றின்வழி" என்பன போன்ற பல பொருட்கள் உள்ளன. "அம்" என்னும் தொழிற்பெயர் விகுதியும் பல பொருள் கொண்டது. அறுத்தல் தொழிலையும் அழகினையும், அமுதத்தினையும், அருமையையும் உணர்த்துவது. மேலும் ''மனிதன் தனக்கெனவகுத்துக்கொண்ட ஒழுகலாற்று முறைகளின் தொகுதியே அறம் என்றும் கூறுவர். இதனை படவர் கூறும் தருமம் எனல்குற்றம் உலக மொழிகளில் கூட இதனைச்சுட்டும் ஒருசொல் இல்லை என்பதை அறிக.

அறம் 32 என்று புராணப்பாங்கில் கூறுவர். அவையாவன 1. ஆதுலர்க்குச் (நோயாளிக்கு மருத்துவம்) சாலை, 2. ஓதுவார்க்குணவு 3. அறுசமயத்தவர்க்குண்டி, 4. பசுவிற்குவாயுறை 5. சிறைச்சோறு 6. அய்யம் 7. தின்பண்டம் நல்கல் 8. அறவைச்சோறு 9. மகப்பெறுவித்தல் 10. மகவு வளர்த்தல் 11. மகப்பால் வார்த்தல் 12. அறவைப்பிணம்சுடல் 13. அறவைத்தூரியம் 14. சுண்ணம் வழங்கல் 15. நோய் மருந்து தருதல் 16. வண்ணார்பணி 17. நாவிதப்பணி 18. கண்ணாடி நல்கல் 19. பெண்யோகம் 20. பிறர்துயர்காத்தல் 21 தலைக்கெண் நெய் 22. காதோலை 23. கண்மருந்து 24. தண்ணீர்ப்பந்தல் 25. மடம் 26. தடம் 27. கா (பூங்கா) 28 ஆவுருஞ்சுதறி 29. விங்கிற்குணவு 30. ஏறுவிடுதல் 31. விலைகொடுத்து உயிர்காத்தல் 32 கன்னிகாதானம் எனறு அபிதான சிந்தாமணி பக் 108இல் கூறும்.

கதிரை வேற்பிள்ளையவர்களின் "தமிழ் மொழி அகராதி" அறம் என்பதற்குப் பொருளாக "கையறம், தருமம், நேர்மை, நூற்பயன், நான்கில்

ஒன்று, பெரியோரியல்பில் ஒன்று என்று கூறும். இவையாவும் முழுமையற்றன என்பது புரியும்.

தமிழ்ப்பேரகராதி இச்சொல்லிற்குப் புண்ணியம், தருமம், தகுதி, ஞானம், நோன்பு, தீப்பயன் உண்டாக்கும் சொல், அறக்கடவுள், இயமன் என்பனவற்றைக் கூறும். இவையும் சரியற்றன என்பது அறியப்படும்.

அறமாவது மனுமுதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஏழித்தலுமாம். அது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூவகைப்படும்..... " என்பர் பரி மேலலழகர். இவர்தம் கூற்று தமிழ்மொழிக்கே எமனாயிற்று. தனித்தமிழ் இயல்பு கொண்ட திருக்குறளுக்குப்பின்னர் வந்த சமசு இருத வழியில் பொருள் கண்ட குற்றம் உடையவர் இவர். இவரைப் போற்றும் இழிந்த தமிழர்கள் கடையாயினவர்கள். என்பதைப் பின் வரும் இயல்களில் நாம் நிறுவுவோம்.

உலகில் உள்ள நல்லன எல்லாம். தகுதியாயின எல்லாம், தகுதியாயின எல்லாம் புண்ணியமெல்லாம், நோன்மெல்லாம், ஞானமெல்லாம், அறம் எச்செயல்யாவராலும் பாராட்டப் பெறுகின்றதோ அச்செயல் அறம் என்பர் தண்டபாணி தேசிகர் அவர்கள்.

"அறம் என்பது ஒருவகை வாழ்க்கை நெறி அது காப்புநிலை வாழ்க்கைக்குத் தேவைப்படும் காப்புநிலை அது நம் விருப்பங்களை நேர்மையான முறையில் நிறை வேற்றிக்கொள்ள உதவுவது. பொருளையும் இன்பத்தையும் நுகர்ந்து மகிழ்வதல நம்மை நெறிப்படுத்தும் சக்தியாக இருப்பது. நம்மை நெறியோடும் முறையோடும் ஒழுகுமாறு இயக்குவது அறம் அறம் - மனமாசற்ற நிலையில் உள்ளத்தின் தூய்மையை வெளிப்படுத்துவது என்பர் க.த. திருநாவுக்கரசு அவர்கள்.

"அறம் என்ற சொல்லிற்குக்குறள் அடிப்படையில் ஐந்து படித்தளப் பொருள்களைக் காண்பர். அவையாவன 1. கடவுள் 2. 3.மாறாமெய்ம்மை 4.அறம்பாடுதல் 5.பொருள்களின் தனிக்குணம் என்பன முதற்படித்தளம் என்றும். 1. நேர்மை 2. மரபொழுங்குமுறை 3. சட்டமுறை 4.நீதி என்பன இரண்டாம் படித்தளம் என்றும்; 1.நல்லொழுக்கம் 2.ஒழுக்கச்செயல் 3.நல்வினையாகிய ஈகை 4.சமுதாயத் தொண்டு என்பன மூன்றாம் படித்தளம் என்றும்; அவற்றின் விளைவுகள் ஐந்தாம் படி நிலை" என்றும் கா அப்பாத்துரையார் கூறுவர்.

அறத்தாறு என்பதன் விளக்கம் கூறவந்த அழகரடிகள் பின்வருமாறு கூறுவர். "உலகத்தில் இந்த அறத்தாறு இருவகையில் இயங்கிவருகிறது. ஒருவகை உயிரற்ற அறியாமைப் பண்டங்களில் ஒழுங்கு முறையாகப்பதிந்து புலன் முதல் புறக்கருவிகளுக்கும், மனம் முதலிய அகக்கருவிகட்கும் எழுச்சியும் இன்பமும் ஊட்டி வருகின்றது. மற்றொருவகை அறிவு உள்ள உயிர்களின் நேர்மைக்குறம் வீறி அல்லாத வகைகளில் எல்லாம் பற்று அறச் செய்து வாழ்க்கையை மாட்சிமைப்படுத்தி வீட்டுணர்ச்சி பெருக்கிவருகின்றது. பொருள் வாழ்க்கையை இன்பவாழ்க்கையாகவும் வீட்டுவாழ்க்கையாகவும் மலர்விக்க அறம் உதவுகின்ற மாதிரி மற்றவை உதவுவதில்லை " என்பார் அழகரடிகள்.

தமிழ்க்கலைகக் களஞ்சியம், "மனித இனத்தின் நடத்தை, ஒழுக்கம், வாழ்க்கையின் நோக்கங்கள் முதலியனவற்றைப் பரிசீலனை செய்யும் சாத்திரம் அறநூல் எனப்படும் என்று கூறும்.

"தமிழரின் அறநெறியைக் குறளாசிரியர் அறத்துப்பாலிலும், அறவழிவரும் பொருள் இன்பங்களை ஏனைய இருபாலிலும் சுட்டுகிறார். குறளை அறம் என்றே புறம் பேசுகின்றது எனவே அறம் பற்றிய சிந்தனைக்குத் தெரிந்த விளக்கத்தைத் திருவள்ளுவரிடத்தில் காணல் பொருத்தமாம் என்பர் திருவி.க அவர்கள். அவரே "மனத்துக்கண் மாசிலா அற நிலையை எய்துவதற்குத் திருவள்ளுவர் வகுத்த முறைகள் போற்றற்குரியன. இல்வாழ்க்கை, மக்கட்பேறு, அன்பு முதலிய அதிகார வைப்பு முறைகளை நோக்குக. அவற்றை நோக்க நோக்கத் திருவள்ளுவர கோலிய அறநெறி புலப்படும் என்பர்.

பொருளியல் அறிஞர் முனைவர் பா. நடராசன் அவர்கள் "வள்ளுவர் கூறும் அறம் தன் மனித சமுதாய ஒழுங்குமுறையே என்றும் என்றும் மாறாத ஒழுக்க நெறியும் உலகியல் பொதுமை சான்றதுமே அறம் என்பர். அத்துடன் குறளாசான் 53 இடங்களில் அறம் என்பதற்கு விளக்கம் தந்துள்ளார் (அக்குறட்பாக்கள் 8, 23, 30, 31, 32, 33 34, 35, 36, 37, 39, 40, 45, 46, 47, 48, 49, 76, 77, 96, 130, 141, 142, 147, 148, 150, 157, 163, 173, 179, 181, 182, 183, 185, 189, 204, 249, 288, 296, 297, 321, 366, 384, 491, 501, 543, 635, 644, 754, 909, 1009, 1018, 1047. என்பவைாகும்.

இங்கு அறிஞர்கள் பலரின் கருத்துக்களை எடுத்துக்காட்டியதன் நோக்கம் எமது கருத்துக்கு அரண் சேர்ப்பது மட்டுமன்று தமிழ் உலகில் மிகச்

சிறுபான்மையினரே கயமை உள்ளம் படைத்தவர் என்பதையும் எடுத்துக்காட்டவே என்பதையும் நாம் உணர்தல் வேண்டும்.

## அறவியல் விளக்கம்

அறத்தின் செயலாக்கம், இயலும் தன்மை, இயங்காற்றல் அறவியல் ஆகும். இதனை வள்ளுவரே " அறம் ஆளும் சூழ்ந்தவன் கேடு " (அறமே தண்டிக்கும்) என்பதால் அறியலாம். அறமே இயங்காற்றல் மிக்கது என்பதை இன்றைய உலகம் நம் கண்முன் காட்டக் காணலாம். அறம் கெட்ட "சோதம், போன்ற அழிவைக்காத்குயார் காட்டக்காண்க. எனவே இயலும் வழியெல்லாம் அறத்தினைக் காக்க என்பதனை வலியுறுத்தும அறிவியல் என்பதை நாம் நன்கு புரிதல் வேண்டும்.

## திருக்குறளின் அறவியல் அடித்தளம்

திருக்குறளின் நோக்கும் போக்கும் அறவியல் அடித்தளம் கொண்டதே என்பதைத் திருக்குறள் வழி நாம் காணலாம். திருவள்ளுவர் மெய்யியல், உளவியல், மானுடவியல், குமுகவியல் நின்று அனைத்து நிலைகளிலும் அறமே ஆள்க என்பர். அதனை முதலில் நாம் உணர்தல் வேண்டும் உணரின் திருக்குறளின் அடித்தளத்தை நாம் அறிந்து கொள்ள இயலும்.

சான்றாகச் சில குறட்பாக்களை மட்டும் காண்போம்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (39) என்றும்,

"சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல் பசுமண்
கலத்துள் நீர் பெய்து இரீயற்று" (660)

"அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை, அதனை
மறத்தலின் ஊங்இல்லை கேடு (32) என்னும் குறட்பாக்களை நோக்குக. நோக்கின் குறளின் அடித்தளம் விளங்கும்.

அறம் ஒன்றே தரும் நல்லின்பம் என்பதையும்

அறம் அற்ற வழிவரும் பொருள் அழியும் என்றும்,

ஆக்கம் அறத்தின் ஊக்கம், அறக்கேடு அழிவு என்றும்

கூறக்காண்க. எனவே மாந்த வாழ்வே மனத்துக்கள் மாகின்யும் சொல் செல்களி; மாகின்றியும், குற்றங்கடிந்தும் வினைத்தூய்மைமையுடன் அறன் போற்றியும் வாழ்க என்பதே வள்ளுவம்.

"அறம் பொருள் இன்பம் உயிரச்சம் (501)

பொருள் என்னும் செல்வச் செவிலி (75)

அந்தணர் என்போர் அறவோர் (30)

மற்றும் அறன்வலியுறுத்தல் அதிகாரம் முழுமையும்; அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை" என்பதையும்; அறிவுடைமை அதிகாரத்தையும், குற்றம்கடிதல், வினைத்தூய்மை போன்ற அதிகாரங்களையும் காண்கின் திருக்குறளின் அடிமனை, அடித்தளம் அறமே என்பது நனிவிளங்கும். அறன் ஈனும் சிறப்பும் செல்வமும் என்னும் குறட்பாவையும் (31) எனவே செய்யத்தகுவது அறமே என்றும் அறுதியிடக் காண்க. உலகெல்லாம் அறத்தின் ஆட்சியும் மாட்சியும் நடைபெற வேண்டும் என்பதே குறளாசானின் உள்ளம் என்பதையும் இங்கு நாம் உணர்தல் வேண்டும்.

## முடிவுரை

மேற்காட்டிய செய்திகளால் அறம் என்பதன் விளக்கம் கூறும் சொற்கள் உலக மொழிகளில் இல்லை என்பதைக் கண்டோம் மற்றும் அறம் என்பது

1. அகத்தூய்மை
2. புறத்தூய்மை
3. தீமையற்றது
4. மெய்மையானது
5. அருளுடன் கூடியது
6. நல்லதையே செய்வது
7. உலக இன்பம்
8. பொதுமை நோக்கம்
9. கேடு அற்றது
10. பேரின்பம் தருவது

போன்ற உயர்பொருளையும் கொண்டியல்வது என்பதையும் நாம் அறியமுடியும் எனவே அறத்தின் ஆட்சியும் மாட்சியும் உலகில் நிலைப்பின் கெட்ட போரிடும் உலகம் அழியும். வாகை இன்பம் மண்ணகம் பெறும். அத்துணை மாந்தரும் தெய்வ நிலை பெறுவர் என்பன போன்றவற்றையும் நாம் அறிந்து துய்க்கலாம்.

# காந்தியைக் கண்டு கதிகலங்கிய சர்ச்சில்!

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

வெள்ளையரின் காலத்தின் மதுரை வந்து
விழிதிறந்து கவனித்தார் காந்தி அண்ணல்;
'பள்ளத்தில், வறுமையினில் நீந்தும் மக்கள்
பாதிஉடை கூடஇன்றி வாடும் போது,
கொள்ளைஉடை எனக்குமட்டும் ஏன், ஏன்?' என்றே
கூறிஅவை துறந்திட்டார்; வெள்ளை உள்ளக்
கள்ளமிலா அச்செம்மல் ஒரேஒர் வேட்டி
கட்டியிங்கே சாகும்வரை வாழ்ந்தார் அன்றோ?

அதேஉடையில் பக்கிரிபோல் இலண்டன் சென்றே
அரசரினைச் சந்தித்தார் ; நிருப ரெல்லாம்
"இதே உடையா?" என எள்ளிக் கேட்டார்; அண்ணல்,
"என்பங்கும் சேர்த்துமன்னர் அணிவ தாலே,
சதா இந்த அரையாடை அணிந்தேன்!" என்றார்.
'சத்தியாக் கிரக' மெனும் போரால் தேசப்
பிதா அவரும் பெரும்புரட்சி விளைத்த போது
பிரிட்டிஷ்மண் பெருங்கலக்கம் அடைந்த தாங்கே!

"தடியூன்றும் காந்திக்கேன் அஞ்சு கின்றீர்!
சர்ச்சிலினைக் கேட்டார்கள்; அவரும் சொன்னார்:
"நெடுங்கூர்வாள் ஏந்தி அந்தக் காந்தி வந்தால்,
நேர்நின்றே துப்பாக்கி கொண்ட ழிப்பேன்;
கொடும்பீரங் கிகொண்டே எதிர்த்தி ருந்தால்,
கொன்றிருப்பேன் அணுகுண்டால்! அவர்க ரத்தில்
எடுத்திருக்கும் 'அகிம்சை' எனும் ஆயு தத்தை
எதிர்கொள்ள நம்கையில் ஏது மில்லை!"

# பள்ளியெழுச்சி வகை வளர்ச்சி

முனைவர் கி. இராசா
பாரதிதாசன் பல்கலைக் கழகம்.

## இலக்கணக் குறிப்பு

*தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்*
*சூதல் ஒத்திய துயிலெடை நிலையும்* – தொல். புறத். 30

என்பது துயிலிடை நிலையை விளக்கியுரைக்கும் தொல்காப்பிய நூற்பாவாகும். இடந்தோர்க்குக் கேடு இல்லாத நற்புகழைப் பொருந்த வேண்டிச் சூதுல் ஒத்திய துயில் எடை நிலையும் என்று இளம்பூரணாரும், தமது வலியாலே பாசறைக் கண் ஒரு மனக் கவர்ச்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்ல புகழைக் கொடுத்தலைக் கருதிய சூதல் அத்துயிலெடுப்பின் ஒத்தின துயிலெடை நிலையும் என்று நச்சினார்க்கினியரும் இந்நூற்பாவுக்கு உரை வகுத்துள்ளனர். தம் உரைக்கு விளக்கப் பொருள் உரைத்துள்ள நச்சினார்க்கினியார், ... அவர் துயிலெடுப்புத் தொன்று தொட்டு வரும் என்பதூஉம் சூதர், மாகதர், வேதாங்கர், வந்திகர் முதலானோரும் சூதரே இங்ஙனம் வீரத்தால் துயின்றாரைத் துயிலெழுப்பின ரென்பதூஉம் யாண்டும் முன்னுள் னோரையும் பிறரையும் கூறப்படுமென்பதூஉம் கொள்க. என்று துயிலெடை நிலையின் பொருண்மையை விளக்கிக் கூறுகிறார்.

## உரைக்குறிப்பு

துயிலெடை நிலைக்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் வகுத்துள்ள உரைகளை ஒப்பிட்டுக் காணும்போது, உரை சொல்லும் போக்கில் வளர்ச்சியை அறியலாம். துயிலெடை நிலை பாடும் இடம், பாடுவோர், துயிலெழுப்புதலின் காரணம் என்பன பற்றிய குறிப்புகள் இளம்பூரணர் உரையில் இல்லை. ஆனால் இக்குறிப்புகளை மேற்சுட்டிய நச்சினார்க்கினியர் உரையில் காணலாம். வேந்தனைப் பாசறையில் துயிலெழுப்பும் குறிப்பினை,

இரவுப் புறம்கண்ட காலைத் தோன்றி

எஃகு இருள் அகற்றும் ஏமப் பாசறை

வைகறை அரவம் கேளியர்..... – புற. 397 : 6 – 8

எனவரும் புறநானூற்றுப் பாடற்பகுதி தருகிறது. மதுரை நகரில் பொழுது புலர்ந்ததை முப்பத்தி மூன்று அடிகளால் விளக்கி உரைக்கும் மாங்குடி மருதனார்,

சூதர் வாழ்த்த, மாகதர் நுவல,

வேதா ளிகரொடு நாழிகை இசைப். – மதுரைக். 670–1

என்று துயிலெடை நிலை பாடுவோர் பற்றிய குறிப்புக்களைத் தந்துள்ளார். புறநானூற்றுக் குறிப்பினைக் கருத்திற்கொண்டு, தமது வலியாலே பாசறைக் கண் ஒரு மனக் கவற்சியன்றித் துயின்ற அரசர்க்கு.... என்றும், துயிலெடை நிலை பாடுவோரைக் குறிக்குமிடத்து மதுரைக் காஞ்சிப் பாடல்களை மனங்கொண்டும் இலக்கிய மூலக்கூறு விளக்கத்திற்கு இலக்கிய வகைமைச் சான்றுகளை நச்சினார்க்கினியர் காட்டியுள்ளார்.

## வெண்பாமாலையும் உரையும்

*அடுதிறன் மன்னரை யருளிய எழுகெனத்*

*தொடுகழன் மன்னரைத் துயில் எழுப் பின்று* – பாடாண். 9.

என்று துயிலெடை நிலைக்குப் பு.வெ.மாலை இலக்கணம் வகுத்துள்ளது. கட்டுங்கழல் வேந்தனைத் துயில் நீக்கியது என்ற உரைக்குறிப்பும் (உ.வே.சா. பதிப். ப. 92) காமலர்க் கண்ணேற்க துயில் என முடியும் கொழு விளக்கச் செய்யுளும், பள்ளியெழுச்சி எனக் குறிப்பிடாது , துயில் எழுப்பியது என உணர்த்துகின்றன. பள்ளியெழுச்சி இலக்கியங்கள் வழக்கில் இருந்தாலும், அதனைப் பு.வெ.மாலை குறிப்பிட்டமைக்குரிய காரணம் அறியத்தக்கது.

### துயிலெடை நிலையும் பள்ளியெழுச்சியும்

திருப்பள்ளியெழுச்சி பாடிய தொண்டரடிப் பொடியாழ்வார், கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். பு.வெ. மாலையாசிரியர் கி.பி. 9ஆம் நூற்றாண்டவர். தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்திற்கு முன்பிருந்தே பள்ளியெழுச்சிப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாய் மக்களிடையே பேராட்சி புரிந்து வந்தன. இவ்வாறு மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்த

பள்ளியெழுச்சி இலக்கிய வகையைத் தேர்ந்தெடுத்துத் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியிருந்தாலும், அவருக்குக் காலத்தால் பிற்பட்ட ஐயனாரிதனார் தாம் வகுத்த இலக்கணத்தில் பள்ளியெழுச்சி என்று குறிப்பிட்டாரிவர். தொல்காப்பியர் வழி நின்று துயில் எழுப்புதல் என்ற பொருளில் இலக்கணம் வகுத்துள்ளார். மேலும் துயில் எழுப்புதல் அரசனை மட்டுமன்றி, இறைவனையும் சார்ந்து வரும் என்று தம் காலத்தில் வழக்கில் இருந்த மரபு வளர்ச்சியை ( திருப்பள்ளியெழுச்சி ) ஐயனாரிதனார் குறிப்பிட்டாரிவர். திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களைக் கற்று அவற்றின் கருத்துக்களை நினைந்து ஐயனாரிதனார் தம் நூற்பாவில் அருளிய வணங்க என்பனவற்றை அமைத்திருக்க வேண்டும் எனும் கருத்தும் இவண் ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

துயிலெடைநிலை, திருப்பள்ளியெழுச்சியாக வளர்ந்தமையை, ஐயனாரிதனார் தம் இலக்கணத்தில் சுட்டிக் காட்டாமல் சென்றதற்குப், பழைய நூலாகிய பன்னிரு படலத்தை ஒட்டியே புறப்பொருள் இலக்கணம் வகுத்தல் வேண்டும் என்ற நோக்கத்தால் அவ்வாறு தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டார். என்று காரணம் காட்டுவர். மேலும் திருப்பள்ளியெழுச்சி பாடுவதற்கு முன்னரே நாட்டு மக்களின் வழக்கத்தில் துயிலெடை நிலை பெருவழக்கில் இருந்திருக்க வேண்டும் என்றும், அரசனுக்கும் மக்கட் தலைவருக்கும் துயிலெடை நிலையாகப் பாடப்பெற்ற இலக்கியம் இறைவனைப் பாடுவதாக மாறியது என்றும் கருதுவர். இதனால் அரசனுக்கும், மக்கள் தலைவர்க்கும் பாடுவது துயிலெடைநிலை என்றும், இறைவனுக்குப் பாடுவது திருப்பள்ளியெழுச்சி என்றும் அவர் குறித்தார் எனக் கருத இடமுண்டு.

தொல்காப்பியமும், பு.வெ. மாலையும் மட்டுமின்றி, அவற்றின் பின்னர்த் தோன்றிய பாட்டியல் நூல்களும் துயிலெடை நிலை என்றே குறிப்பிட்டுள்ளன. மேலும் இது மன்னரைப் பாடுவது என்ற அளவோடு அவை அமைகின்றன. உலா (ப.பா.54), பிள்ளைத்தமிழ் (பிர.மா.3) எனும் இலக்கிய வகைகளில் இறைவனையும் மனிதனையும் பாடலாம் என இப்பாட்டியல் நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளமை இவண் ஒப்பு நோக்கத் தகுவதாகும். பள்ளியெழுச்சி எனும் குறிப்பைப் பாட்டியல் நூல்கள் தவிர்த்துள்ளமையும்,

பாட்டுடைத் தலைவனாக இறைவனைக் குறிக்காமையும் பின்வரும் முடிவுக்கு இட்டுச் செல்கின்றன. துயிலெடை நிலை என்பது மன்னரையும், மக்கள் தலைவரையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெறுவது; பள்ளியெழுச்சி என்பது இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடப்பெறுவது. .

## பாட்டியல் நூல்கள்

பாட்டியல் நூல்கள் பளளயெழுசசயின இலககணததை இருநிலைகளில் வரைப்பதாகக் கருதுவர். அரண்மனையில் விடியலிலே திறை கொண்டுவந்த மன்னரும், திறை தராமையால் சிறைப்பட்ட மன்னரும் ஒத்தி நிற்றலைக் கூறி, அவன் சொற்கேட்க அவர் விழைதலைச் சுட்டி, அரசனைத் துயிலெழும்படி விளம்புதல் என்பது ஒருநிலை; பாசறைக் கண் படை பலம் பற்றி நற்றுயில் பூண்ட மன்னனை நன்மை கூறி வந்த தூதர் எழுக என்பது பிறிதொரு நிலை. பாட்டியல் நூல்கள் துயிலெடை நிலை என்ற நோக்கில் இலக்கணம் வகுத்திருப்பினும், பள்ளியெழுச்சி எனும் பெயர் இலக்கியத்தில் நிலைத்துவிட்டது. அரண்மனையில் துயின்ற அரசரைத் துயிலெழுப்புவதைப் பன்னிருபாட்டியலும் (122) பாசறையில் அரசனைத் துயிலெழுப்புவதைப் பிரபந்த தீபிகையும் (22) குறிப்பிட்டுள்ளன. பிற பாட்டியல் நூல்களில் துயிலெடை நிலைக்குரிய இலக்கணம் சொல்லப்படவில்லை.

## வகைமை வளர்ச்சி

விடியல் வருணனை, புலரிக் காட்சிகள், இசைக் கருவிகளை இசைத்தல், வாழ்த்தல் என்பன பள்ளியெழுச்சியின் வகைமைக் கூறுகளாகும். சங்கப் பாடல்களில் வகைமைகளாக வளம் பெற்ற இவை பக்தி இலக்கியக் காலத்தில் பள்ளியெழுச்சி வகை வளரக் காரணமாயின. பள்ளியெழுச்சிக் கூறுகளின் தொடக்க நிலையைப் பாணரும் புலவரும் நின்றேத்தும் பரிசில் துறையில் அமைந்த சங்கப் பாடல்களில் காணலாம்.

### (1) விடியல் வருணனை :

விடியல் வருணனை பள்ளியெழுச்சிக் கூறுகளில் தலைமை சான்றதாகும். இவ்வருணனைக் கூறுகளின் தோற்றத்தை மதிநிலாக் கரப்ப

வெள்ளி ஓர் தர... இரவுப் புறம் பெற்ற ஏமவைகறை (புற. 398 : 16) வெள்ளியும் இருவிசும்பு ஏர் தரும்.... இரவும் புறங்கண்ட காலை ( புற. 397 : 6 ) இருள் நிலாக் கழிந்த பகல் செய் வைகறை (புற. 394 : 6) பசலை நிலவின் பனிபடு விடியல் (புற. 392 : 3), வெள்ளி தோன்றப் புள்ளுக்குரல் இயம்ப புலரி விடியல் ( புற. 385 : 1-2 ), ஒண்பொறிச் சேவல் எடுப்ப ஒற்றெழுத்து, தண்பனி உறைக்கும் புலரா ( புற. 383 : 1-2) என்று பரிசில் துறையில் அமைந்த பாடல்களும், விரிகதிர்வெள்ளி முளைத்த நல்இரு விடியல் ( 71-2 ), என்று பொருந ராற்றுப் படையும் காட்டுகின்றன. இதனையே கதிரவன் குணதிசைச் *வந்தணைந்தான், கணவிருள் அகன்றது காலையம் பொழுதாய்* (1:1-2) சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம் (3 : 1) போயிற்று கங்குல், புலர்ந்தது புலரி (5:1) என்று தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சியில் பாடியுள்ளார். அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள் போய், அகன்றது (2:1) ஒவின தாரகை ஒளிஎறி உதயத்து (3) என்று மாணிக்க வாசகர் விடியல் வருணனையைக் குறிப்பார்.

## ( 2 ) புலரிக் காட்சிகள்

புலரிக் காட்சிகளைக் காட்டுமிடத்தும், பரிசிற்றுறையில் அமைந்த புறநானூற்றுப் பாடல்கள் பள்ளியெழுச்சி பாடுவோர்க்கு வழிகாட்டுவனவாய் அமைந்துள்ளன.

*பொறிமலர் வாரணம் பொழுது அறிந்து இயம்ப*

*பொய்கைப் பூமுகை மலர.......* -புற. 398 : 3-4

*.............. புள்ளும்*

*உயர்சினைக் குடம்பைக் குரல்தோற் றினவே*

*பொய்கையும் போதுகண் விழித்தன...* -புற. 397 : 1-3

*ஒண்பொறிச் சேவல் எடுப்ப....* -புற. 383 : 1-5

புலரிக்காட்சி வருணனை மதுரைக் காஞ்சியில் பின்வருமாறு விளக்கம் பெற்றுள்ளது.

*பொறிமயிர் வாரணம் வைகறை இயம்ப*

*யானையால் குருகின் சேவலொடு காமா*

*அன்னம் கரைய அணிமயில் அகவ*

*பாடிபுணர் பெருங்களிறு முழங்க* – மதுரைக். 673 : 6

சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள இத்தகுப் புலரிக்காட்சியின் கருத்தொருமையைப் பள்ளியெழுச்சிப் பாடல்களில் காணலாம்.

*கூவின பூங்குயில் கூவின கோழி*

*குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்*

– மாணிக். திருப்பள்ளி 3 : 1-2

*புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்*

*போயிற்று கங்குல் புலர்ந்தது புலர்* – தொண்ட. திருப்பள்ளி 5 : 1-2

## (3) இசைத்தலும் வாழ்த்தலும்

அரண்மனை வாயிலில் விடியற்காலத்தே பரிசுக்கு நின்ற பாணர், மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றியும் (304 : 6-9) இறுகிணை சிலம்ப ஒற்றியும் (383 : 2-5) மன்னனை வாழ்த்தும் காட்சிகள் புறநானூற்றுப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. (383:4-5, 392:11-2, 383 : 23 - 25) மன்னரைத் துயிலெழுப்பச் சங்கம் ஊதப்பட்ட செய்தியைப் புற. 225 ஆம் பாடலின் வழி அறியலாம். திருவரங்கத் தம்மானைத் துயிலெழுப்பத் தண்ணுமை, மத்தளம், யாழ், குழல், முழவம் போன்ற இசைக் கருவிகளை முழக்கியும் மீட்டியும் கீதங்களும் வாழ்த்துக்களும் பாடினர் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியுள்ளார். (திருப்பள்ளி 9) திருப்பெருந்துறை இறைவனைத் துயிலெழுப்ப வீணையர், யாழினர், தோத்திரம் இயம்பினர், தொழுகையர், அழுகையர் என்போர் வரிசையில் நின்றனர் என மாணிக்கவாசகர் பாடியுள்ளார். ( திருப்பள்ளி 4 ) பள்ளியெழுச்சியின் போது மங்கல இசையும் வாழ்த்து எழுவதைச் சங்க இலக்கியத்தின் தொடர்ச்சியாக இருவரும் காட்டியுள்ளனர்.

## வகைமை வகை

தமிழ் இலக்கிய வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்து, யாப்பு, பொருள் ஆகியவற்றில் புதுமையைத் தோற்றுவித்த பக்தி இலக்கியக் காலத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத் தம்மான் மீது திருப்பள்ளியெழுச்சி பாடினார். இவருக்குப் பின்னர் மாணிக்கவாசகர் திருப்பெருந்துறை இறைவன் மீது திருப்பள்ளியெழுச்சி பாடினார். இவ்விருவரது பள்ளியெழுச்சிப் பாடல்களையும் ஒப்பு நோக்குமிடத்து, இவ்வகையின் வளர் பண்பினைக் காணவியலும்.

## இயற்கைச் சூழல்

பக்தி இயக்கக் காலத்தில் வட்டார உணர்வும், இயற்கையை இறைவனாகப் பார்க்கும் உணர்வும் தலைமை பெற்றிருந்தன. இவற்றுள் இயற்கையை இறைவடிவாகப் பார்க்கும் உணவு நிலைகளைத் தொண்டரடிப் பொடியாழ்வாரது திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் காணலாம். இப்பாடல்கள் எளிய உணர்ச்சிகளாய் ஆனவை. முதிர்ந்த அனுபவ உண்மைகள் இப்பாடல்களில் படிந்திருக்கவில்லை. இவர்தம் பாடல்களில் இயற்கையின் ஆட்சி மிகுதியுண்டு. விடியல் வருணனையும், புள்ளின ஆரவாரமும் இவற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளன.

> பள்ளியெழுச்சியானது ஆண்டவனிடத்தில் சென்று பணிவிடை என்ன
> என்று கேட்டு ஆர்வமுடன் செய்வதாகும் என்பது இதன் பொருள்.
> சாத்திர ரீதியாக அன்றி உலகியல் ரீதியாகச் சொல்லப்பட்ட
> இப்பொருளே திருப்பள்ளி யெழுச்சிக்குரிய உண்மையான கருத்து.

எனும் கூற்று, தொண்டரடிப் பொடியாழ்வார்தம் திருப்பள்ளியெழுச்சியின் எளிய கருத்துப் புலப்பாட்டினைச் சுட்டுவதாகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# வாசகர் வாசகம் ②

அன்புள்ள செந்தமிழ் ஆசிரியர்க்கு,

சீர்மிகு தமிழ் போற்றும் செந்தமிழ் ஆசிரியர் பெருந்தகையீர், வணக்கம். செந்தமிழ் நவ. 2011 இதழில், உள்அட்டைப் படம், உள்படம், செய்திக்குறிப்பு, சங்கத்தின் பெருமை மிகு தமிழ்ப் பணிகளைக் கண்முன் நிறுத்தி, வாசகர் உள்ளத்தில் நன்றிப் பெருக்கையும், நல்வாழ்த்துக்களையும் தோற்றுவித்தன. மூன்று கவிதைகளில், எளியேனின் இளவேனில் கவிதையையும், நிறுத்தக்குறியும் பிசகாமல் அச்சிட்டு மகிழ்ச்சியில் ஆழ்த்தியமைக்கு, மிகவும் நன்றி. கவிதைகளின் எண்ணிக்கை வளர்ச்சிக்கோடு தெரிகிறது.

7 கட்டுரைகளில்.... முசிறி நிறைவுப் பகுதி, 'வாணியம்பாடி' மற்றும் 'கொச்சி' பற்றித் தரும் வரலாற்றுச் செய்திகள், இதுவரை எளியேன் அறியாத புதியன... 'மகளிர் வாழ்வியல்' கட்டுரையாளர், தாலமியின் குறிப்புத் துணைகொண்டு, மதுரைவரை யவன வணிகர் சென்றுவர, கடற்கரையிலிருந்து நேர்வழித்தடம் அமைந்த நுட்பத்தை வெளிப்படுத்திய திறம் பாராட்டுக்குறியது ! 'தமிழும் ஆங்கிலமும்...' கட்டுரையில், 'மொழி' சொல் விளக்கம், பெயர்க் காரணம், திருமழபாடி, பழைசையுள் மழபாடி ஆகியனவற்றைத் தெளிவுறக் காட்டுகிறது !

செந்தமிழ் வளர்க்கும் பெருந்தகையர் தம் ஆன்மிக விளக்கத் தொடர் கட்டுரையாகிய நால்வர் பெற்ற அருள் சைவ நாயன்மார் அறுபத்து மூவருள், நால்வர் அருளாளர் எனப்படும் காரணத்தை மிகவும் நுட்பமாகவும் மனம் கொள்ளுமாறும் எடுத்துரைக்கிறது ! 1923இல் *சண்முகக் கவசம்* பாடியதால், எலும்பு முறிவு விரைவில் இணைந்து குணமானது என்னும் நிகழ்வை (பாம்பன்) குமரகுரு தாசர்... கட்டுரை வழி அறிந்து வியந்தேன். அறுபதுகளில் மாத இதழில் (*மஞ்சரி அல்லது குமரி மலர்*) ஒலிக்கு நரம்புகளை இயக்கும் ஆற்றல் உண்டு எனும் குறிப்புச் செய்திக் கட்டுரை படித்தது நினைவிற்கு வந்தது ! அகநானூற்றில்.... கட்டுரை கோப்பாகத் திகழ்கிறது. பாராட்டத்தக்க முயற்சி ! இதுபோன்ற கட்டுரைகள் வாசகர் கவனத்தைச் சங்க இலக்கியங்கள் பால் ஈர்க்கும் அகச்சான்று எண்கள் அந்நூல் பயிலக் கை விளக்காய் உதவும்.

செந்தமிழ் வழங்கும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர்க்கு, நன்றி.

அன்பு ஏற்றுக்கொள்ளுங்கள் !

**புலவர் சி. பாண்டுரங்கன்**
ஆம்பூர்

# வாசகர் வாசகம் ③

பேரன்புசால் செந்தமிழ் இதழாசான் அய்யா அவர்களுக்கு வணக்கம்.

பகுதி இரண்டைப் படித்துக் களித்தேன். உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் இந்தியாவே பெண்களை அடிமையாக்கி வைத்திருப்பதில் முதற்பரிசு பெறத்தக்கது எனும் விஜயகுமார் அவர்களின் இழை யோடல் அப்பழுக்கில்லா உண்மையாகும். பெண்ணுரிமை பற்றி சிந்திக்கும் போது மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்ற அமரகவியின் கவிதை வரிகளோடு சதைக்கல்லாய் இருக்கின்றாய் - வைரமுத்து; படிக்காமலே இத்துணைப்பட்டவர்கள் – மீரா; விளையாட்டிற்குரிய பொம்மையாகவே உன்னை ஆக்கினோம் - மு. மேத்தா போன்ற சான்றோரின் புதுக்கவிதை வரியிலும் நம் நெஞ்சம் இனிக்கின்றன. பொதுவாகக் கவிஞர்களால் மனித வாழ்வையும் இயற்கையையும் பிரித்துக் கவிதை படைக்க இயலாது என விளம்பியுள்ள செந்தமிழ்ச் செல்வரை நற்றிணையில் ஐந்நிலப் பாகுபாட்டிலும் பொதிந்துள்ள இயற்கைப் புனைவுகளை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

தலைவனைப் பிரிந்து துயராற்றும் தலைவியரின் உளம் படும் வேதனையை ஒக்கூர் மாசாத்தியாரின் குறுந்தொகைப் பாடல்களைக் கொண்டு கலைச்செல்வி அவர்கள் தந்துள்ள செய்திகள் புலவோர்க்கு நல் விருந்தாயின. அறிவியல் கோட்பாடு தொடங்கி மெய்யுணர்வு கோட்பாடு ஈறாகப் பத்துக் கோட்பாடுகளைக் கையிலெடுத்து மனிதனைத் தெய்வமாக்கித் திருவள்ளுவர் விழைந்துள்ளமை அறம், பொருள், இன்பமாக நம்மை ஈர்ப்பதை முனைவர் அரங்கசாமி எடுத்து விளம்பியுள்ள விதம் மிகச் சிறப்பு. வாழ்க்கைக் கலைக்கு – கவிவேந்தரின் கவிதையும் சுற்றுச்சூழல் – கவிதையும் இதழுக்கு மெருகூட்டி அழகு சேர்க்கின்றன.

**புலவர் ந. ஞானசேகரன்**
திருலோக்கி

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை - 1

RNI Regd. No. 5508/57 March 2012 MA/130/2011-2013
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மு. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.